Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) மூன்றாந் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Ad. Level) 3rt Term Exam – 2026

இஸ்லாமிய நாகரிகம்	47	T	II	மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்

பகுதி – I

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

1. இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களில் "வஸதிய்யா" எனப்படுவது

   I. பூரணத்துவமிக்கது II. உலகமயமானது III. நடுநிலையானது

   IV. யதார்த்தமானது ஏ. சர்வதேசமயமானது

2. தர்தீபுந் நுஸூல், தர்தீபுத்திலாவத் எனும் பதங்கள் சுட்டுவது

   I. அருளப்பட்ட ஒழுங்கு முறை , பாதுகாக்கப்பட்ட முறை

   II. தொகுக்கப்பட்ட ஒழுங்கு, அருளப்பட்ட ஒழுங்கு

   III. ஓதும் ஒழுங்கு, அருளப்பட்ட ஒழுங்கு

   IV. அருளப்பட்ட ஒழுங்கு, ஓதும் ஒழுங்கு

   V. அருளப்பட்ட ஒழுங்கு, தொகுக்கப்பட்ட ஒழுங்கு

3. பின்வரும் விடயங்களைக் கருதுக

   A. வஹி முற்றுப் பெற்றிருக்காமை

   B. ஹாபிழ்கள் குறைவாக காணப்பட்டமை

   C. நபி (ஸல்) அவர்கள் உயிருடன் வாழ்ந்தமை

   D. தொகுப்பதற்கு அனுமதிக்கப்படாமை

   E. தொகுப்பதற்கான வசதிகள் காணப்படாமை.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் நபியின் காலத்தில் அல்குர்ஆன் நூலுருப்பெறாமைக்கு பிரதான காரணங்களாகக் கூறப்படும் விடயங்களைக் கொண்ட விடைத் தொகுதி

1. A B D 2. A B E 3. A C D 4. D C E 5. B D E

4. மனித இனத்தின் எல்லா செயற்பாடுகளிற்குமுரிய அறம் சார்ந்த அடிப்படையே சமயமாகும் என்ற கருத்தை முன்வைத்தது

   I. பிளேட்டோ II. ஸ்ட்டோ III. அரிஸ்டோட்டில்

   IV. காந்தி அடிகள் V. கன்பூசியஸ்

5. பின்வருவனவற்றுள் ஈமானின் அர்கான்களில் அடங்காதது

   I. இல்லாஹ் II. அத்னா III. பரஉ IV. அஸ்ல் V. ஹுக்ம்

Past Papers Wiki

6. "அல்ஹாவீ" எனும் புகழ்பெற்ற மருத்துவ நூலின் ஆசிரியர்

I. எட்வட் ஜெனரே II. கம்ஸ்டன்ட் III. கெலன்

IV. அலி இப்னு ஸீனா V. அர்ராஸி

7. தக்லீத் என்பதற்கு பின்வரும் கூற்றுக்களில் சரியானது

I. இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள்

II. இமாம்களின் கருத்தை கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல்

III. நபியவர்கள் அறிவித்ததாகக் கூறப்படும் ஹதீஸ்கள்

IV. இஸ்னாதில் ஏற்கும் ஹதீஸ்கள்

V. இமாம்களின் கருத்தை ஆய்வு செய்து பின்பற்றுதல்

8. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக

A. அல்குர்ஆனிய வசனங்களைக் கொண்டு அல்குர்ஆன் வசனங்களை விளக்குதல்

B. இந்திஹாதின் மூலம் விளக்குதல்

C. ஸுன்னாவின் துணை கொண்டு விளக்குதல்

D. மூத்த ஸஹாபாக்களிடம் கேட்டு விளக்கம் பெறல்

I. A C D B II. C D A B III. B D C A IV. D A C B V. D B C A

9. எகிப்திய நாகரிகத்துடன் தொடர்புபடும் நதியைக் குறிக்கும் சொல்

I. தைக்ரீஸ் நதி II. நைல் நதி III. குவாங்கே நதி

IV. யூப்ரடீஸ் நதி V. சிந்து நதி

10. குர்ஆனிற்கு அடுத்த நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹதீஸ் வகை

I. ஆஹாத் II. முத்தஸில் III. மர்பூஉ IV. முதவாதிர் V. அஸீஸ்

11. முஸ்லிம்களை நடுநிலை சமூகமென குறிப்பிட அல்குர்ஆன் பயன்படுத்தியுள்ள வார்த்தை

I. ரப்புல் ஆலமீன் II. உம்மஹாதுல் மு.ஃமினீன் III. ரஹ்மதுல்லில் ஆலமீன்

IV. உம்மதன் வஸதன் V. உம்மதன் வாஹிதா

12. அல்குர்ஆன் தொகுக்கும் பொறுப்பு தொடர்பாக அபூபக்கர் (றழி) அவர்கள் முன்வைத்த மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க

I. இப்பணியை மேற்கொள்வதற்கு தகுதியான என்னைவிட தகுதியானவர் வேறு ஒரு பலர் இருக்கின்றனர்

II. இப்பணியை என்னால் இலகுவாக செய்து கொடுக்க முடியாது

III. இப்பணியை அல்குர்ஆனைத் தொகுப்பது எனது பணியல்ல

IV. இப்பணியை விட ஒரு மலையை நகர்த்துவது இலகுவாகும்

V. இப்பணியை மேற்கொள்ளும் பொறுப்பை உஸ்மான் (ரழி) அவர்களிடம் விட்டு விடுவோம்.

13. இஸ்லாமிய வரலாற்றில் "கலீபதுஸ்ஸாலிஹ்" என அழைக்கப்பட்ட கலீபா

I. வலீத் இப்னு அப்துல் மலிக் II. ம.ஃமூன் இப்னு ஹாரூன் ரீத்

III. அல் அமீன் IV. முஆவியா (றழி) V. உமர் இப்னு அப்துல் அஸீஸ்

14. அஜாயிபுல் ஹிந்த் எனும் நூலின் ஆசிரியர்

I. இப்னு கல்தூன் II. இப்னு ஹிஸாம் III. இப்னு இஸ்ஹாக்

IV. இப்னு ஸஹ்ரயார் V. பலாதூரி

15. "தீனே இலாஹி" எனும் மதக் கொள்கையை உருவாக்கியவர்

I. ஹுமாயூன் II. ஸஹ்ருத்தீன் III. ஜமாலுத்தீன் IV. மாமன்னர் அக்பர் V. ஜஹாங்கீர்

16. மு.ஃதஸிலாக் கோட்பாட்டை உருவாக்கியவர் யார்?

I. வாஸில் இப்னு அதா II. ம.ஃமூன் III. அமீன் IV. ஹாதி V. ஹாரூன் ரஷீத்

17. இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்புப் பண்புகளில் மிகச் சரியானது

I. உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைத்திருப்பது

II. சமயத்தையும் நாகரிகத்தையும் பிரித்து நோக்குவது

III. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட இடங்களுக்கு மட்டும் பொருத்தமாக இருப்பது

IV. உலகியலைப் புறக்கணித்து ஆன்மீகத்தை ஊக்கப்படுத்துகிறது

V. இஸ்லாமிய அறிஞர்களின் சிந்தனைக்கேற்ப ஒழுங்குபடுத்தியது

18. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க:

I. எழுப்பப்படும் நாள்	A. சுவனத்தின் ஒரு பெயர்
II. நரகத்தின் ஒரு பெயர்	B. யவ்முல் ப.ஃஸ்
III. விசாரணை	C. நீர்த்தடாகம்
IV. தாருல் கரார்	D. ஹிஸாப்
V. ஹவ்ழுல் கவ்சர்	E. ஸுஃர்

I. B D C A E II. B A E D C III. B E A D C IV. B E D A C V. B E D C A

PAST PAPERS WIKI

19. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க:

1. முஅத்தா	A. ஸஹீஹைன்
2. முஸ்னத் அஹ்மத்	B. 06 ஆதாரபூர்வமான ஹதீஸ் தொகுப்பு
3. ஸஹீஹுல் புஹாரி, முஸ்லிம்	C. பிக்ஹ், ஹதீஸ் துறை சார்ந்தது
4. ஸிஹாஹுஸ்ஸித்தா	D. ஸிஜிஸ்தான்
5. அபூதாவூத்	E. அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்)

I. C E A B D II. C B A E D III. D C A B E IV. A C B D E V. E D B C A

Past Papers Wiki

20. கீழே தரப்படும் விடயங்களை வைத்து 20-25 வரையான வினாக்களிற்கு விடை தருக.

இல	முதலாவது கூற்று	இரண்டாவது கூற்று
1.	சரியானது	பிழையானது
2.	சரியானது	சரியானது
3.	பிழையானது	பிழையானது
4.	பிழையானது	சரியானது
5.	சரியானது	முதலாம் கூற்றை மேலும் உறுதிப்படுத்துகிறது

	முதலாவது கூற்று	இரண்டாவது கூற்று
20.	மறு உலக வாழ்வில் ஒவ்வொரு தனிமனிதனும் தனியாகவே விசாரிக்கப்படுவான்.	ஒவ்வொரு தனிமனிதனும் தனது இறைவன், ஆன்மா, குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த விடயங்கள் விசாரிக்கப்படுவான்.
21.	தாபிஉஈன் கால அறிஞர்கள் ஹதீஸ்களைத் திரட்டி பாதுகாக்கும் முறையை அறிமுகம் செய்தனர்.	முஸ்னத் அஹ்மத் எனும் நூல் தாபிஉஈன் காலத்தில் தொகுக்கப்பட்டதாகும்.
22.	மு.்.தஸிலாக்களின் முன்னோடி ஹஸனுல் பஸரி ஆவார்.	மு.்.தஸிலாக்கள் குர்ஆன் படைக்கப்படவில்லை என்ற கருத்தை முன்வைத்தனர்.
23.	ஷரீஆ என்பது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாற்றமடையும்.	இமாமிய்யா என்பது ஷீஆக்களின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாகும்.
24.	குர்ஆனில் மட்டும் ஆழ்ந்த தேர்ச்சி பெற்றிருப்பது முஜ்தஹீதின் பண்பாகும்.	நபியவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஹதீஸ் ஆகும்.
25.	ஹுதல்லின்னாஸ் என்பது நபியைக் குறிக்கும்.	பல கருத்துக்கு இடம்பாடில்லாத வசனங்கள் முஹ்கம் எனப்படும்.

பகுதி II

பகுதி I இலிருந்து ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து முறையாக மூன்று வினாக்களிற்கு விடை எழுதுக.

பகுதி I

1.

I. இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் நான்கினை விளக்குக.

II. அல்குர்ஆன் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரம் என்பதற்கு குர்ஆனிலிருந்து இரண்டு ஆதாரங்கள் தருக.

III. ரிஸாலத் அவசியம் என்பதற்கான காரணங்கள் 04 தருக.

IV. பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்குக.

(4 x 5 = 20)

2.

I. இஸ்லாமிய நாகரிகம் ஏனைய நாகரிகங்களிலிருந்து வேறுபடும் விதத்தை விளக்குக.

II. அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள் நான்கினை குறிப்பிடுக.

III. முஜ்தஹித் ஒருவரிடம் காணப்பட வேண்டிய சிறப்பியல்புகள் நான்கினை விளக்குக.

IV. ஹதீஸ்களைப் பாதுகாக்க இமாம்கள் கையாண்ட வழிமுறைகளை விளக்குக.

(4 x 5 = 20)

பகுதி II

3.

1. ஹதீஸ்களைப் பாதுகாப்பதில் இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் பங்களிப்பை விரிவாக ஆராய்க.

2. இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய துணை மூலாதாரங்கள் நான்கினைக் குறிப்பிட்டு இரண்டினை விளக்குக. (7 + 8 = 15)

4.

1. மகாஸிதுஷ்ஷரீஆவின் பிரதான பரிமாணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

2. இஸ்லாமிய நாகரிகம் உலகிற்கு வழங்கிய முன்மாதிரிகளைத் தெளிவுபடுத்துக.

(7 + 8 = 15)

5.

1. கியாஸின் அடிப்படைகளை உதாரணங்களுடன் விளக்குக.

2. இஸ்லாமிய நாகரிக மேம்பாட்டிற்கு சுன்னாவின் வழிகாட்டல்களை விளக்குக.

(7 + 8 = 15)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library